www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 10

காலஅளவு : 3.00 மணி நேரம்

தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் - 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15×1=15**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .............

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

2) 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .............

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5) பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ............. வேண்டினார்.

அ) எலிசபெத், தமக்காக ஆ) கருணையன், பூக்களுக்காக

இ) கருணையன், எலிசபெத்துக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

6) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 - காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி. ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி.

இ) செய்தி 3 மட்டும் சரி. ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி.

8) தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

9) மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

V10T

10) நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் .............
அ) கரு ஆ) எழுத்து இ) கற்றல் ஈ) பொருள்

11) 'இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) காடு ஆ) காற்று இ) மேகம் ஈ) விண்மீன்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

''ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ''

12) இப்பாடல் இடம்பெறும் நூல் .............
அ) சிலப்பதிகாரம் ஆ) பெரியபுராணம்
இ) கம்பராமாயணம் ஈ) திருவிளையாடற்புராணம்

13) வேழம் - என்ற சொல்லின் பொருள் .............
அ) யானை ஆ) குதிரை இ) தந்தம் ஈ) மான்

14) நெடுந்திரை என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) நெடு+திரை ஆ) நெடும்+திரை இ) நெடுமை+இரை ஈ) நெடுமை+திரை

15) இப்பாடலில் உள்ள அடியெதுகை .............
அ) நெடுந்திரை - நெடும்படை ஆ) தோழமை - ஏழமை
இ) போவாரோ - வில்லாளோ ஈ) ஏழமை - ஏசாரோ

## பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4×2=8**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

17) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

20) பொன் ஏர் பூட்டுதல் என்றால் என்ன?

21) 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10**

22) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

23) ''பொழிந்த'' - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

24) **தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக:**
மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலகமொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்த இருதிணை அமைப்பே காரணமாகும்.

25) 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

26) **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
அ) மடு - மாடு ஆ) இயற்கை - செயற்கை

27) **தொடர்களை முழுமை செய்க:**
அ) பசுமையான .............இக் ............. கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) பொதுவாழ்வில் ............. கூடாது. ............. இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

28) **கலைச்சொல் தருக:**
(அ) Storm (ஆ) Cabinet

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

30) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?

ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

31) "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" - இதுபோல் இளம் பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2×3=6**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) "வாளால் அறுத்துச்" எனத் தொடங்கும் குலசேகராழ்வாரின் பாடல்.

**(அல்லது)**

ஆ) "நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

### பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36) "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது".

**- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

37) கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

**- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

## பகுதி - IV (மதிப்பெண்கள் - 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) **சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக:**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி .......... தண்டலை மயில்கள் ஆட ........... - **இவ்வுரையைத் தொடர்க!**

**(அல்லது)**

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39) அ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்கவிழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து, உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

V10T

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) மேல்நிலை வகுப்பில் சேர 'பெரியதம்பி' என்ற மாணவன் விண்ணப்பிக்கிறார். அவர் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் - 97, ஆங்கிலம் - 90, கணிதம் - 95, அறிவியல் - 92, சமூக அறிவியல் - 96 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார். மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு படிவத்தை நிரப்புக. தேர்வர்கள் தங்களை 'பெரியதம்பி' என்ற மாணவனாகக் கருதிக் கொள்ளவும்.

42) அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி; திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி. இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்படவைக்க நீங்கள் செய்யும் முயற்சிகள் ஐந்தனைப் பட்டியல் இடுக. **(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க:**

1. Education is what remains after one has forgotten what one has learned in school - Albert Einstein.
2. Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb.
3. It is during our darkest moments that we must focus to see the light - Aristotle.
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - Winston Churchill.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக. **(அல்லது)**

ஆ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த நான்கு அறங்களைக் குறிப்பிட்டு அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

44) அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) உங்கள் பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.
குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக்கூறு - நூல் ஆசிரியர். **(அல்லது)**

ஆ) **உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்றுவந்த நிகழ்வை கட்டுரையாக்குக:**
முன்னுரை - நுழைவுச்சீட்டு - பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள் - அங்காடிகள் - பிறபொழுதுபோக்கு அம்சங்கள் - முடிவுரை.

----------